யூனியன் மருந்தகத்தை மருத்துவமனையாக மாற்றுவோமானால் இன்னும் பல்வேறு மருந்தகங்கள் அவ்வாறு கேட்கும் நிலைமை ஏற்படும். ஆகவே அப்படி செய்ய முடியாது. பக்கத்திலே அங்கிருந்து 3 மைல் தூரத்திலே திருப்பத்தூரில் 120 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனை இருக்கிறது. அந்த மருத்துவ மனைக்கு செல்லக் கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், இந்த மருந்தகத்தை நாம் எடுத்துக் கொள்ளக் கூடிய திட்டம் எதுவும் இல்லாத காரணத்தால், இதற்கு வேறு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

புதுப்பாடி, திமிரி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச் சுவர்

*வினா எண் 275—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆற்காடு தொகுதி புதுப்பாடி மற்றும் திமிரி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்களுக்கு சுற்றுச் சுவர்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) இத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :—

(அ) தற்போது இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ் வினா எழாது.

திரு. ஏ. எம். சேதுராமன் : பேரவைத் தலைவரவர்களே, டாக்டர்கள், நர்ஸ்கள் தங்குவதற்கு வசதிகள் இருந்தும் அந்த இடங்களுக்கு காம்பவுண்ட் சுவர் இல்லாததால், பாதுகாப்பு குறைவாக உள்ளது. ஆகவே அவற்றிற்கு காம்பவுண்ட் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனேகமாக எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் இப்படிப்பட்ட காம்பவுண்ட் சுவர் இல்லாத குறை இருக்கிறது. அதைப் படிப்படியாகக் கட்டிக் கொண்டு வருகிறோம். இப்போது 47 ஆரம்ப சுகாதார நிலையங் களுக்கு காம்பவுன்ட் வசதி செய்வதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு, வேலைகள் முடிந்து விட்டன. இந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்து நான் சில விவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். புதுப்பாடியில் உள்ள ஆரம்பச் சுகா தார நிலையத்தைப் பொறுத்த வரைல் ஏற்கனவே உத்தரவு போடப்பட்டுள்து.

TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 10 ;

Further action will be pursued for Construction of Compound wall on receipt of proposals from the Director of Primary Health Centres.

அதற்கான புரோபசல் அனுப்ப வேண்டும் என்று கேட்டு எழுதி இருக்கிறோம். வந்தவுடன் அந்த வசதி செய்து முடிக்கப்படும் என்றுசொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு ஒன்றியத்தைப் பொறுத்த வரையில்-திமிரி ஒன்றியம்-நாம் 5 ஏக்கர் நிலம் கேட்டோம். ஆனால் அவர்கள் 1.5 எக்கர் நிலம் தான் கொடுத்து இருக்கிறார்கள். 5 எக்கர் நிலமும் பத்தாயிரம் பணமும் கட்ட வேண்டும் என்று சோல்லியிருக்கிறோம். அதைக் கட்ட வேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்கள் அதிலே கொஞ்சம் கவனம் செலுத்தி சம்பந்தப்பட்டவர்களிடம் அணுகிப் பேசி, அந்த நிலத்தையும், பணத்தையும் அளிக்க உதவி செய்யும் நடவடிக்கை மேற்கொள்வார்களானால், உடனடியாக நம்முடைய திட்டத்தின் கீழ் வருகின்ற ஆண்டில் அந்த வேலையை முடித்து விடலாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, ஆற்காடு நகரத்தில் டிஸ்பென்செரி மட்டும் இருப்பதால், அங்கே உள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற வாரத்தில் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு தாலுக்காவிலும் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகள் அமைக்கப்படும் என்று. ஆகவே எந்த விதமான வசதியும் இல்லாத ஆற்காடு நகரத்தில் மருத்துவ மனை ஏற்படுத்த அமைச்சர் அவர்களும் அரசும் முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஆற்காடு நகரத்தில் இருக்கும் டிஸ்பென்செரி மிகவும் சிறியதாக இருக்கிறது. நான் கூட சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்பு சென்று அந்த இடத்தைப் பார்த்தேன். அதை விரிவு படுத்தி நல்ல மருத்துவ மனையாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதற்கான புரபோசல்களை அனுப்புமாறு டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸ் அவர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து பரிந்துரைகள் வந்ததும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.